உ
சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை
Monthly Journal of Sivapoomi

சிவம்–05 | சுபகிருது வருடம் மாசித் திங்கள் பெப்ரவரி 2024 | பூமி–12



## எமது இளைஞர்களுக்காக தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும்



பல பணிகளை எமது மண்ணில் ஆற்றிவரும் புலம்பெயர் சமூகங்கள் அவற்றில் ஒன்றாக எம்மண்ணில் நவீன தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் தாயகத்துக்கு செய்து வரும் தொண்டு என்பது எல்லையற்றது. பள்ளித்தலங்கள், ஆலயங்கள், வறுமைக்குட்பட்ட மக்கள் மற்றும் பல்வேறு சமூக நிறுவனங்களுக்கு நாளாந்தம் பல்வேறு உதவிகளை ஆற்றி வருபவர்கள் புலம்பெயர் தமிழர்கள். அவர்கள் நிரந்தரமான சில விடயங்களில் அக்கறை கொள்ள வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வேலையற்று இருக்கும் இளையவர்கள் அதிகமாக காணப்படுவதனால் புலம்பெயர் சமூகத்தினால் சில தொழிற்சாலைகள் எமது மண்ணில் உருவாக்கப்பட வேண்டும்.

பொருட்களுக்கு கேள்வி உள்ள உற்பத்தி பொருட்களை தேர்ந்தெடுத்து தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும். தொழிற்சாலைகளில் ஆண் பெண் இருபாலருக்கும் வேலை வாய்ப்பை வழங்க வேண்டும்.

இலங்கை அரசாங்கம் இப்பொழுது புதிய நியமனங்கள் எதுவும் செய்யாத காரணத்தினால் பல்கலைக்கழக கல்வியை முடித்த பல பட்டதாரிகள் வேலையற்றிருக்கின்றார்கள். பல்கலைக்கழகம் செல்லாத மாணவர்களும் வேலையற்றிருக்கின்றார்கள். வேலை இல்லாத காரணத்தினால் பலர் வெளிநாடுகளுக்கு புறப்பட ஆயத்தமாக நிற்கிறார்கள். ஏற்கனவே எமது சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைவடைந்து செல்கின்றது. மீண்டும் நமது நாட்டை விட்டு இளம் தலைமுறையினர் பிற நாட்டுக்கு செல்வார்களேயானால் எதிர்காலம் கேள்விக்குறியாகி விடும். எனவே புலம்பெயர் சமூகத்தவர்கள் எமது மக்களின் எதிர்கால கல்வி, புலம்பெயர் மக்களின் ஒத்துழைப்போடு சில தொழிற்சாலைகளை கிராமங்களில் தோற்றுவிக்க வேண்டும். இது காலத்தின் கட்டாயமாகும். வேலை வாய்ப்புகள் சீராக அமையுமானால் நாட்டை விட்டு புறப்படுகின்றவர்களின் தொகையை கட்டுப்படுத்த முடியும். அதுமட்டுமன்றி வேலையற்ற வீண்விரயமாக நேரத்தை செலவழிப்பதோடு அநாகரிகமான முறையில் தெருக்களிலே திரியும் இளைஞர் சமுதாயத்தை, அலைந்து திரியாமல் ஒரு பொறுப்புள்ள ஒரு சமுதாயமாக உருமாற்றுவதற்கு எதிர்காலத்தில் தொழிற்சாலைகள் அத்தியாவசியமானவை.

**ஆசிரியர்**
கலாநிதி. செஞ்சொற்செல்வர். ஆறு. திருமுருகன்

**உதவி ஆசிரியர்**
திரு. ச. சந்தோஷன்

**வடிவமைப்பாளர்**
செல்வி. க. மதுஷிகா

தொழிற்சாலை தொடர்பான அனுமதி பெறுவதில் சில சிரமங்கள் இருந்தாலும் இப்பொழுது புலம்பெயர் சமூகத்தின் உடைய மூலதனத்தை அரசு வரவேற்கும் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும். உள்நாட்டில் புலம்பெயர் சமூகம் முதலீடுகளை இடுமாறு அரசு கூவி அழைத்து இருக்கின்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வடக்கு,கிழக்கு, மலையகம் போன்ற தமிழர்கள் வாழ்கின்ற பிரதேசங்களில் போதிய தொழிற்சாலைகளை நிறுவி, நவீன முறையில் அவற்றை எதிர்கால தலைமுறை பணியாற்றக்கூடியதாக அமைக்க வேண்டும்.

இந்த சிந்தனையை இந்த வேளையில் சிந்தித்தல் காலத்திற்கு பொருத்தமானததாகும். அதோடு, இளைஞர்களை அவர்கள் சொந்தக் காலிலேயே நிக்க வைப்பது தான் அவர்களுக்கு நாம் வழங்கும் மிகச்சிறந்த பரிசாக அமையும்.

## தெல்லிப்பழை துர்க்கையம்மனுக்கு கருங்கல் மூலாலயம்

02.02.2024 அன்று தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் மூலாலய கருங்கற் திருப்பணிக்கான வேலைகள் மூலாலயம் அமைய வேண்டிய இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்காக கடந்த சில மாதங்களாக ஆலய வளாகத்தில் பல சிற்பாசிரியர்கள் ஒன்று சேர்ந்து கருங்கற்களை அழகுற செதுக்கி வந்துள்ளனர்.





## சைவத்தின் காவலர் நீலகண்டன் ஐயாவின் நினைவுநாள்



தமிழும் சைவமும் சிவபூமியில் நீண்டு வளர தர்ம நெறியில் நின்று உழைத்த பெருமகனாரும், இலங்கையில் புகழ்பூத்த சட்டத்தரணியுமான மதிப்பிற்குரிய திரு. கந்தையா நீலகண்டன் அவர்கள் சிவகதி அடைந்து ஆறு வருடங்கள் (18.02.2018) நிறைவு பெறும் இவ்வேளையில் அவரது சிவப்பணிகளுடனான அறப்பணிகளை போற்றி வணங்குவோம்.

# புதிய திருமஞ்சத்தில் மாவைக் கந்தன்

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தைப்பூச தினத்தை முன்னிட்டு புதிதாக அமைக்கப்பட்ட திருமஞ்சத்தின் திரு வீதியுலா வந்த முருகப்பெருமான் பக்தர்களுக்கு திருக்காட்சி தந்தருளினார்.







# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் நடைபெற்ற குழந்தைகளுக்கான ஏடு தொடக்கல் நிகழ்வு

தைப்பூச தினமான 25.01.2024 அன்று தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் செஞ்சொற்செல்வர் அவர்களினால் ஏடு தொடக்கி வைக்கப்பட்டது. பல பகுதிகளிலிருந்தும் பெருமளவான குழந்தைகள் பெற்றோருடன் வந்து அம்பாளை தரிசித்து தாம் கல்வியில் சிறந்து விளங்க வழிபாடு மேற்கொண்டனர்.







# தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தால் கந்த புராணம் நூல் வெளியீடு




தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் தைப்பூசம் அன்று 25.01.2024 காலை, கந்த புராணத்தின் முதலாம் பாகம் வெளியிட்டு வைக்கப்பட்டது. தேவஸ்தானத்தின் தலைவர் செஞ்சொற்செல்வர் அவர்களினால் இந்த சிறப்பு மிக்க பதிப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது.

உள்நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக ஆலயங்களில் இருந்த பல நூல்கள் அழிவடைந்து விட்டது. இதனால் கந்த புராணத்தினை படிக்கும் பழக்கம் ஆலயங்களில் அருகிவிட்டது. இந்த சூழ்நிலையில் துர்க்கா தேவி தேவஸ்தானம் கந்த புராணத்தினை முழுமையாக மீள் பதிப்பு செய்யும் முயற்சியினை எடுத்து அதன் ஒரு அங்கமாக முதலாம் பதிப்பினை இன்று வெளியிடுகின்றோம் என தெரிவித்தார் செஞ்சொற்செல்வர்.

சமஸ்கிருதத்தில் அமைந்திருக்கும் சங்கர சம்ஹிதா என்ற நூலின் அடிப்படையில் கந்தபுராணம் தோன்றியதே முருகப் பெருமான் நிகழ்த்திய அற்புதம்தான். காஞ்சியில் சுமார் 1,100 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்தவர் கச்சியப்ப சிவாசார்யர். தம்முடைய பத்து வயதிலேயே முருகப் பெருமானின் பரிபூரண அருளைப் பெற்ற கச்சியப்ப சிவாசார்யர், அனைத்து ஆகமங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.

இந்நிலையில்... குமரக்கோட்டத்து அழகனுக்கு ஓர் ஆசை தோன்றியது போலும்! தன் பெருமை பேசும் ஸ்கந்த புராணம், அழகுத் தமிழில் பாடப்படவேண்டும் என்பதுதான் அந்த விருப்பம். முருகப் பெருமான், தமிழ்க் கடவுள் என்று போற்றப்பெறுபவர் அல்லவா? எனவே, அவருடைய மகிமையைப் பாடும் புராணம் தமிழிலும் இருக்க வேண்டும் என்று விரும்பியது நியாயம்தானே

சரி, தனக்குத் தோன்றிய விருப்பத்தை யாரைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்வது? விரும்பியவருக்குத் தெரியாதா தன்னுடைய விருப்பத்தை யார் மூலம் நிறைவேற்றிக்கொள்வதென்று?

சிறு பிராயத்திலேயே தன்னுடைய பரிபூரண அருளைப் பெற்ற கச்சியப்ப சிவாசார்யரைக் கொண்டே கந்த புராணம் பாடப்பட வேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். ஒரு நாள் இரவு கச்சியப்பரின் கனவில் தோன்றிய முருகப் பெருமான், என்னுடைய புராணத்தை அழகு தமிழில் பாடுவாயாக! என்று கூறி மறைந்தார். மேலும் அவரே, திகடசக்கர செம்முகம் ஐந்துளான் என்று அடியெடுத்தும் கொடுத்தார். விழித்தெழுந்த கச்சியப்பர் முதலில் திகைத்தாலும், முருகப் பெருமானின் கட்டளை என்பதால், கந்த புராணத்தை இயற்றத் தொடங்கினார். ஒவ்வொரு நாளும் நூறு பாடல்களை இயற்றுவார். இரவானதும், தாம் இயற்றிய பாடலைப் பார்த்தால் கச்சியப்பர் எழுதிய பாடல்களில் முருகப் பெருமானால் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கும்.

இப்படிக் கந்த புராணம் முழுவதையும் இயற்றி முடித்ததும், ஒரு நல்ல நாளில் குமரகோட்டத்தில் அரங்கேற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. அரங்கேற்றத்தின்போது கச்சியப்பரின் முருக பக்தியின் சிறப்பையும், அவருடைய புலமைத் திறமையையும் உலகத்தவர்க்கு உணர்த்த திருவுள்ளம் கொண்டார் முருகப் பெருமான். அதற்கு ஒரு புலவரைக் கருவியாகக் கொண்டார். அரங்கேற்றம் நடைபெற்ற வேளையில், கந்த புராணத்தின் முதல் அடியில் இடம்பெற்றுள்ள திகட சக்கரம் என்ற வார்த்தையில் சொற் குற்றம் இருப்பதாக, அவையில் இருந்த புலவர்களில் ஒருவர் கூறினார்.

முருகப் பெருமானே எடுத்துக்கொடுத்த அடியில் சொற் குற்றம் உள்ளதாகப் புலவர் கூறியதைக் கேட்டு வருத்தத்துடனேயே உறங்கச் சென்றார் கச்சியப்பர். அன்றிரவு கச்சியப்பரின் கனவில்தோன்றிய முருகப்பெருமான், புலவரின் குற்றச்சாட்டை தாமே நேரில் வந்து போக்குவதாகக் கூறி மறைந்தார்.அதன்படியே மறுநாள் முருகப் பெருமான் புலவராக வடிவம் கொண்டு அவைக்கு வந்தார்.



திகட சக்கரம் என்ற சொல்லில் குற்றம் இருப்பதாகக் கூறிய புலவருக்கு மறுப்புத்தெரிவிப்பதுபோல், திகட சக்கரம் என்ற சொல் வீரசோழியம் என்ற அணியிலக்கணம் கூறும் நூலில் உள்ளதாகக் கூறி, அவையோர் பார்த்துக்கொண்டிருந்தபோதே மறைந்தார். வந்தவர் சாட்சாத் முருகப் பெருமானே என்று உணர்ந்த அவையோர், கச்சியப்பரின் முருக பக்தியைப் போற்றிச் சிறப்பித்தனர். கந்த புராணம் அரங்கேற்றம் கண்ட மண்டபத்தை இன்றும் நாம் குமரகோட்டத்தில் கண்டு மகிழலாம்.

முருகப் பெருமானின் திருவரலாறாகிய கந்த புராணத்தைக் காதலுடன் இப்புவியில் படிப்போர், கேட்போர், நினைப்போர் யாவரும், இந்திரனைப் போலத் தலைமைத்துவமும் இன்பமும் மிக்க வாழ்வை வாழ்ந்து இறுதியில் பரமானந்த நிலையாகிய சிவபதப் பேறும் பெறுவர் என்பது நம்பிக்கை.

தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத்துக்கு உரித்தான சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் அச்சேற்றப்பட்ட சிறப்புக்குரியது. இந்த நூல். போருக்குப்பின் பல ஆலயங்களில் கந்தபுராண நூல்கள் இல்லாத நிலையை உணர்ந்து, இப்பணி அம்பாளின் திருவருளால் தொடர்கிறது. கந்தபுராணப்படிப்பை ஒழுங்காகப் பேணும் ஆலயங்களுக்கு நூல் இலவசமாக வழங்கப்படும் என செஞ்சொற்செல்வர் தெரிவித்துள்ளார்.

# நான்காவது ஆண்டில் தடம்பதித்த சிவபூமி அரும்பொருட்காட்சியகம்

தமிழ் மக்களின் பாரம்பரிய வரலாற்றிற்கும், பண்பாட்டிற்கும் புதிய முகவரியை தேடித்தந்திருக்கும் சிவபூமி அருங்காட்சியகம்

யாழ்ப்பாண நுழைவாயிலான நாவற்குழியில் 25.01.2020 அன்று திறந்து வைக்கப்பட்ட சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகத்தின் ஆரம்ப நிகழ்வை ஈழத்தமிழர் வரலாற்றில் நிரந்தரமாக இடம்பெறப்போகும் புதிய அத்தியாயத்தின் தொடக்கமாகப் பார்க்கிறேன்.


இவ்வருங்காட்சியகத்தின் மூலம் எம் சந்ததியினரால் வளர்க்கப்பட்டு எம்மோடு வாழ்ந்து வரும் பாரம்பரிய மரபுரிமைச் சொத்துக்களைச்சிறிதும் பிசகாமல் அடுத்து வரும் சந்ததியினருக்கு கையளிப்பதற்கு வழியேற்படுத்தப்பட்டிருக்கின்றது.



பேராசிரியர். ப. புஸ்பரட்ணம

மூன்று தளங்களில் அமைக்கப்பட்ட இவ்வரும்பொருள் காட்சியகத்தில் வடஇலங்கை மக்களின் பூர்வீக வரலாற்று அடையாளங்கள், மரபுரிமைச் சின்னங்கள், பயன்பாட்டிலிருந்து மறைந்து போகும் பாரம்பரிய பாவனைப் பொருட்கள், தமிழ் மக்களின் கடந்தகால வரலாற்றையும்,பண்பாட்டையும் வெளிச்சம் போட்டுக்காட்டும் புகைப்படங்கள், ஓவியங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.


இவற்றைப் பார்வையிடுவோருக்கு எமது சந்ததியினர் எங்கிருந்து வந்தார்கள், எங்கே போகின்றார்கள், எங்கே போக வேண்டும் போன்ற கேள்விகளுக்கெல்லாம் விடைகாண வழிபிறந்துள்ளது. இந்த அருங்காட்சியகம் தமிழ் மக்களின் விலைமதிக்கமுடியாத சொத்து மட்டுமல்லாமல் அதை தூரநோக்குடன் கடின உழைப்பால் உருவாக்கித் தந்த கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களும் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய சொத்தாகும்.



தமிழ் மக்களின் பாரம்பரிய மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்படுவதற்கு ஒரு முழுமையான அருங்காட்சியகம் வேண்டும் என்பது தமிழ் மக்களின் நீண்டகாலக் கனவாகும். 1971 இல் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் கந்தரோடையில் மண்ணுக்குள் புதையுண்டிருந்த பல நூற்றுக்கணக்கான தொல்பொருட்ச் சின்னங்கள் வெளிவந்தன.

அவற்றைப் பார்வையிட்ட அன்றைய அரச அதிபர் போல்பீரிஸ் அநுராதபுரத்திற்கு அடுத்த புராதன நகரம் கந்தரோடை எனக் குறிப்பிட்டு இம்மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்க தமிழர் ஒருவரைத் தொல்லியல் ஆணையாளராக நியமிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். 1940 ஆம் ஆண்டுக்குரிய பிரித்தானியர் கால ஆவணத்தில் சாவகச்சேரி பழைய நீதிமன்றத்தின் கீழ் புதையுண்டிருந்த புராதன ஆலயத்தின் அழிபாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆதங்கத்தை வெளிப்படுத்திக் காட்டியது.

இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டெழுந்த பத்திரிகைள், தமிழர்களின் மரபுரிமைகள் கவனிப்பாரின்றி அழிவடைந்து வருகின்றன. பணத்திற்காக அவை பிற இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என அறைகூவல் விடுக்கப்பட்டன.



இந்நிலையில் 1970 களில் பேராசிரியர் கா.இந்திரபாலா, வி.சிவசாமி, திரு.ஆ.சிவனேசச்செல்வன் ஆகியோரின் முயற்சியால் யாழ்ப்பாணத் தொல்லியற்கழகம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. அவ்வமைப்பில் ஆர்வத்துடன் இணைந்து கொண்ட ஆசிரியர்களான பொன்னம்பலம், திருவள்ளுவர், நிலஅளவையளர் சேயோன், பூநகரி உதவி அரசாங்க அதிபர் கிருஸ்ணமூர்த்தி, கலைஞானி, குரும்பசிட்டி கனகரட்ணம் போன்ற பெரியவர்கள் தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிவதிலும், பாதுகாப்பதிலும் ஆர்வத்துடன் பணியாற்றினர்.

அவர்களின் கண்டுபிடிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு பல்கலைக்கழக மட்டத்திலும் சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஆயினும் மரபுரிமைச் சின்னங்களைச் சேகரித்த பலர் இன்று அமரத்துவம் அடைந்து விட்ட நிலையில் அம்மரபுரிமைச் சின்னங்களுக்கு என்ன நடந்ததென்பதை யாருமே அறிந்திருப்பதாகத் தெரியவில்லை. 2009 க்குப் பின்னர் முன்பொருபோதும் இல்லாத அளவிற்கு வடஇலங்கை மரபுரிமைச் சின்னங்கள் தென்னிலங்கைக்கும், பிற நாடுகளுக்கும் கடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக 2010 - 2011 காலப்பகுதியில் தென்னிலங்கை வர்த்தகர்கள் தனியார் வீடுகளை வாடகைக்கு எடுத்து வீடு வீடாகச் சென்று குறைந்த விலையில் மரபுரிமைச் சின்னங்களைக் கொள்வனவு செய்த சம்பவங்களும் உண்டு.



அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட மரபுரிமைச் சின்னங்கள் இன்றும் அநுராதபுரம், பொலநறுவை, கொழும்பு, கண்டி போன்ற இடங்களில் உள்ள கடைகளில்வெளிநாட்டவருக்கு உரிய விற்பனைப் பொருட்களாக உள்ளன. கடந்த வாரத்தில் வட இலங்கையில் இருந்து அமெரிக்காவுக்கு கடத்தப்பட இருந்த இரு கோடி ரூபா பெறுமதியான மரபுரிமைச் சின்னங்களை சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளதாக செய்திகள் வெளிவந்தன.

இவ்வாறு எமது இனத்தின் மூலவேர், இன, மத அடையாளங்கள், பாரம்பரிய பண்பாட்டுச் சின்னங்கள் எம்கண் முன்னேயே கடத்தப்பட்டும், அழிவடைந்தும் வருவதை எம்மால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கெல்லாம் மரபுரிமைச் சின்னங்களைப் பாதுகாக்கவேண்டும் என்ற விழிப்புணர்வும், அவற்றைப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியிடம் கையளிப்பதற்கான அருங்காட்சியகங்கள் இல்லாதிருப்பதுமே முக்கிய காரணங்களாகும்.



இவற்றைச் செய்து கொடுக்க அரச அமைப்புக்களோ, பொது நிறுவனங்களோ முன்வரவில்லை. தென்னிலங்கையைப் போல் இங்குள்ள பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் இவற்றைச் செய்வதில் அதிக அக்கறை காட்டி வருவதாகவும் தெரியவில்லை. இதனால் இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து எமது மரபுரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் மக்கள் மத்தியில் ஒரு கனவாகவே இருந்து வந்துள்ளது. ஆயினும் தற்போது அந்தக் கனவுக்கு சிவன் அருள் கிடைத்து விட்டது. அது தனி மனிதனாக இருந்து அல்லும் பகலும் உழைத்த கலாநிதி ஆர். திருமுருகன் வடிவத்தில் கைகூடியுள்ளது. அதுவே நாவற்குழியில் தலைநிமிர்ந்து நிற்கும் சிவபூமி அரும்பொருள் காட்சியகமாகும்.

அரும்பொருள் காட்சியகம் அமைக்கப்பட வேண்டும் என்பது கலாநிதி ஆர்.திருமுருகன் அவர்களின் திடீர் கனவு அல்ல. அவர் துர்க்கையம்மன் ஆலயத் தலைவராக பதவியேற்ற காலத்தில் இருந்து எமது மரபுரிமைச் சின்னங்களைச் சிறுகச் சிறுக சேமித்து வந்ததை நான் அறிவேன். அவை வலிகாமத்தில் மூன்று இடங்களில் பாதுகாக்கப்பட்டு வந்தன. ஆயினும் அதற்கொரு அருங்காட்சியகம் தோன்றும் என நான் கனவு காணவில்லை. அதனால் அவற்றின் வரலாற்றுப் பெறுமதியை உணர்ந்து அம்மரபுரிமைச் சின்னங்களை எமது தொல்லியல் இறுதி வருட மாணவியூடாக ஆவணப்படுத்தி வைத்துள்ளோம். அது தனியொரு நூலாகவும் விரைவில் வெளிவரவுள்ளது. அப்போது சிவபூமி அரும்பொருள் காட்சியகம் தோன்றிய வரலாற்றுப் பின்னணியும் தெரியவரும்.

இன்றைய உலகில் நேரம், பணச் செலவு என்பவற்றைக் கருத்தில் கொண்டு ஒரு நாட்டின் அல்லது ஒரு இனத்தின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு அங்குள்ள அருங்காட்சியகங்களுக்குச் செல்வதையே பெரிதும் விரும்புகின்றனர். தற்போது தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அறிந்து கொள்வதற்கு புதிய வழி திறக்கப்பட்டுள்ளது. பன்னிரண்டு பரப்பில் மூன்று தளங்களில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகத்தின் கட்டிட அமைப்பு, காட்சிப்படுத்தலில் பின்பற்றப்பட்டுள்ள ஒழுங்குமுறை, காட்சிப்படுத்தப்பட்டு வரும் வரலாற்றுச் சின்னங்கள், சிலைகள், சிற்பங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், அவை பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் என்பன அருங்காட்சியகத்தைப் பார்க்க வருபவர்களுக்கு இதுவரை தெரிந்திருக்காத தமிழர் பற்றிய புதிய வரலாற்றுச் செய்திகளை சொல்லப் போகின்றன. அவற்றுள் திறந்த வெளி அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மன்னர்களின் சிலைகள் பலரின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளன. இதுவரை எல்லாளன், சங்கிலியன், பண்டாரவன்னியன் போன்ற தமிழ் மன்னர்களுக்கே சிலை வைக்கப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு 350 ஆண்டுகள் தொடர்ச்சியாக ஆட்சி செய்த 21 தமிழ் மன்னர்களுக்குச் சிலைகள் வைக்கப்படவில்லை. அக்குறைபாட்டைப் போக்கும் வகையில் முதன் முறையாக சிவபூமி திறந்தவெளி அருங்காட்சியகத்தில் 21 மன்னர்களுக்கும் கடவுளருக்கு அடுத்த நிலையில் பீடங்கள் அமைத்து அவற்றின் மேல் மன்னர்களின் சிலைகள் வடிவமைக்கப்பட்டு அவற்றின் கீழ் ஆட்சியாண்டுகள் பொறிக்கப்பட்டுள்ளமை வரலாற்று ஆர்வலகர்களுக்கு மனமகிழ்வை அளிப்பதாக உள்ளது.











கடந்த இருவாரங்களாக முகநூல்களில் பகிரப்பட்ட செய்திகளில் சிவபூமி அருங்காட்சியகம் பற்றிய செய்திகளே அதிக அளவில் ஆக்கிரமிப்புச் செய்தியாகக் காணப்படுகின்றன. இது தமிழ் மக்களின் நீண்ட நாள் கனவு நிறைவேறியதன் பிரதிபலிப்பாகும். இதன் சாதனைக்கும் நன்றிக்கும் உரியவர் அரசியல் கலப்பற்ற சொல்லின் செல்வர் ஆர்.திருமுருகன் அவர்கள். துடிப்புள்ள இளைஞராக ஆன்மீகப் பணியில் ஈடுபட்ட அவர் படிப்படியாக சமூகப் பணியில் அகலக் கால்பதித்து சாதனை படைத்து வரும் ஒருவர். பலர் சிந்திக்க முன்னரே செயலில் காட்டி பிறரைப் புதிதாகச் சிந்திக்கத் தூண்டியவர். இதற்கு தனிமனிதனாக இருந்து கிழக்கிலங்கை வரை இன்று வியாபித்துள்ள அனாதைச் சிறுவர்களுக்கான கல்விக்கூடம், விழிப்புணர்வற்றவர்களுக்கான காப்பகம், வயோதிபர் மடம், நாய்களுக்கான காப்பகம் முதலான அவரது பணிகள் கட்டியம் கூறி நிற்கின்றன. தூரநோக்குடன் நாவற்குழியில் அவர் உருவாக்கிய திவாசக அரண்மனை இலங்கை வரும் ஆன்மீகவாதிகளையும், சுற்றுலாப் பயணிகளையும் யாழ்ப்பாணத்தை திரும்பி பார்க்க வைத்தது. இன்று அதற்கு எதிரே அமைக்கப்பட்டுள்ள சிவபூமி அரும்பொருள் காட்சியகம் தமிழர் பண்பாட்டை மேலும் தலைநிமிரச் செய்துள்ளது. இன்று யாழ்ப்பாணத்தின் நுழைவாயில் நாவற்குழி என அடையாளப்படுத்தப்படும் பெயர் விரைவில் யாழ்ப்பாண இராசதானியின் நுழைவாயில் என அழைக்கப்படுவதற்கு இவ்வருங்காட்சியம் வழிவகுக்கலாம்.

பேராசிரியர் ப.புஸ்பரட்ணம்
தலைவர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பாரதப் பிரதமருடன் கம்பராமாயணம் அரங்கேறிய திருவரங்க மண்டபத்தில் கம்பவாரிதி

அயோத்தி இராமர் கோவில் கும்பாபிசேகத்திற்காக இராமாயணத்தோடு தொடர்புடைய ஆலயங்களில் இந்தியப்பிரதமர் வழிபாடுகளை மேற்கொண்டார். அப்போது கம்பராமாயணம் அரங்கேறிய திருவரங்க மண்டபத்தில் ஈழத்தின்கம்பவாரிதி அவர்களும் வழிபாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருந்தார்.





# நான்கின் மகத்துவம்



1. நாலு பேரு நாலு
 விதமா பேசுவாங்க.

2. நாலு பேருக்கு நல்லது நடக்கும்னா எதுவும் தப்பில்ல.

3. நாலு காசு சம்பாதிக்கவாது படிக்கணும்ல??

4. நாலு ஊரு சுற்றினாதான் உலகம் புரியும்

5. அவரு நாலும் தெரிஞ்சவரு, நாலும் புரிஞ்சவரு.

6. நாலு வார்த்த நறுக்குன்னு நல்லா கேக்கணும்.

ஏன் இந்த நாலு மட்டும் இவ்ளோ ஸ்பெசல்...

சங்க இலக்கியத்தில் பதினெண்கீழ்கணக்கு நூல்களில்,பெயருடன் நான்கு சேர்ந்து வரும். சில நாலு,நாற்பது மற்றும் எட்டுத்தொகையில் நானூறு, பிரபந்தத்தில் நாலாயிரம் என நான்கு வரும்.நாலடியார்,நான்மணிக்கடிகை,இன்னா நாற்பது,இனியவை நாற்பது அக நானூறு, புற நானூறு, நாலாயிர திவ்ய பிரபந்தம் ...

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்"
ஔவையின் நால்வழி நீதி நூலில் கடவுள் வாழ்த்து பாடல்.




நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி...
இதில் நாலு என்பது.. நாலடியார்..

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்நெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

நான்மறை...என்பது வேதங்கள் நான்கு.

சைவ நெறியைப் பரப்பிய நாயன்மார்களில் முதன்மையானவர்கள் நான்கு பேர்.
அப்பர்,சம்பந்தர்,சுந்தரர்,மாணிக்க வாசகர். இவர்களை நால்வர் என அழைக்கிறோம்.

வேதங்களை நான்காகப் பகுத்த வேத வியாசர் ,அவற்றை நாலு ரிஸிக்களிடம் பரப்பும் பொறுப்பை ஒப்படைத்தார்.அவர்கள்
ருக்-பைலர், யஜுர்-ஜைமினி, சாம-வைசம்பாயன,
அதர்வண-சுமந்து.



தசரதனுக்கு நான்கு பிள்ளைகள்.
நான்கு புருடார்த்தங்கள்..அவை
தர்ம, அர்த்த, காம, மோட்சம்.

மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை
கடக்க வேண்டிய நிலைகளும் நான்கு.
பிரம்மசர்யம் , கிருஹஸ்தாச்ரமம் வானப்ரஸ்தம், சந்யாசம்

பிரம்மாவின் மானஸ புத்திரர்கள் நான்கு பேர்.................சநகர், சநாதனர், சநந்தனர், சனத் குமாரர்.

நான்கு வர்ணங்கள்.................பிராமண, ‘த்ரிய, வைஸ்ய, சூத்ர

பிரம்மாவுக்கு நான்கு தலைகள்..............சதுர்முகன் என்ற பெயர் பிரம்மாவுக்கு.

ஆதிசங்கரர் பாரத நாட்டின் நான்கு மூலைகளிலும் நான்கு மடங்கள் நிறுவி,நான்கு சீடர்களை நியமித்தார்.
அக்கினிக்கு கம்பீரா, யமலா, மஹுதி, பஞ்சமி என நான்கு வடிவங்கள்.
திசைகள் நான்கு
ஹரித்வார், அலஹாபாத்(பிரயாகை, த்ரிவேணி சங்கமம்) நாசிக், உஜ்ஜையினி என நான்கு இடங்களில் கும்ப மேளா இடம்பெறும்.



ரத, கஜ, துரக, பதாதி (தேர், யானை, குதிரை, காலாட் படைகள்..என நால் வகைப் படைகள்.

அஹம் பிரம்மாஸ்மி, தத்வம் அஸி, பிரக்ஞானம் பிரம்ம, அயமாத்ம ப்ரம்ம..உபநி‘த்தில் கூறப்படும் நாலு மஹா வாக்யங்கள்.

வெல்ல முடியாத நாலு..
நித்ரா..ஸ்வப்ன..ஸ்த்ரீ..காம
அக்னி..இந்தன..கரா..பாண

கனவு காண்பது தூக்கத்தை நிறைவு செய்யாது
பெண்களுக்கு ஆசை நிறைவு செய்யாது
தீயை விறகு நிறைவு செய்யாது
குடிகாரனை குடி நிறைவு செய்யாது

ந ஸ்வப்னேன ஜயேத் நித்ராம் ந காமேன ஜயேத்ஸ்திரியஹ
ந இந்தனேன ஜயேதக்னீம் ந பானேன கராம் ஜயேத்..விதுர நீதி

இதையே ஹிதோபதேசம்
அக்னியை விறகு அணைக்காது
சமுத்திரத்தை ஆறுகள் நிறைக்காது
யமனை எல்லா உயிர்களும் சேர்ந்தாலும் வெல்ல முடியாது
அழகிகளை ஆண்கள் த்ருப்தி செய்ய முடியாது.. என சொல்கிறது

யுகங்களும்..கிரதம், திரேதம், துவாபரம், கலி என நான்கு

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு..பெண்டிரின் நால்வகை குணங்கள்

சிவாராத்திரியில் நாலு கால பூஜை நடக்கும்.
நான்கு வேதங்களும் கற்றவர்களை சதுர்வேதி என்பார்கள்.

நான்கு என்ற எண் சிறப்புக்கள் கொண்டிருந்தாலும்.. ,
நாலு பேரை போல வாழ்வில் நல்லா இருக்கனும்..

செத்தாலும்,
நல்லதுக்கும்,
கெட்டதுக்கும் நான்கு பேர் வேண்டும்

என்ற கருத்தாக்கத்தையும் கொண்டுள்ளது.

# புதிர் தினத்தில் நெல் அறுவடை மேற்கொண்ட நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தினர்

நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெற்புதிர் அறுவடை நிகழ்வு 24.01.2024 காலை இடம்பெற்றது.

தைப்பூச தினத்துக்கு முதல் நாள் கொண்டாடப்படும் புதிர் தினம் எனும் பாரம்பரிய நிகழ்வில் கோவில்அறங்காவலரும், சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்கு சொந்தமான மறவன்புலவில் உள்ள வயலுக்கு செல்வார்கள். அந்த வயலில் பூஜை வழிபாட்டுடன் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தசுவாமியாருக்கு படையல் செய்து பூசைகள் செய்வது வழக்கம்.

அவ்வாறே இம்முறையும் இடம்பெற்ற படையல் பூஜைகளை தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்கப்பட்டது.

இவ்வழிபாட்டு முறை அக்கோயிலின் மரபாக பண்பாட்டு விழாவாக பேணப்பட்டு வருகிறது. இப்புதிர் விழா 290ஆவது ஆண்டாக இவ்வருடம் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# சிறப்பாக நடைபெற்ற துர்க்கா தேவி வீட்டுத்திட்டம்

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் பல்வேறு சமூக நலப் பணிகளில் ஒன்றாக இல்லப் பிள்ளைகளுக்குரிய உதவித்திட்டமான வீட்டத்திட்டப் பணிகளில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட நான்கு வீடுகள் இன்று திறந்து வைக்கப்பட்டது காலை 8.00 மணிக்கு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் விசேட பூஜை நடைபெற்று அதனைத் தொடர்ந்து தெய்வத் திருவுருவப் படங்கள் எடுத்தச் செல்லப்பட்டு புதிததாக நிர்மாணிக்கப்பட்ட நான்கு வீடுகளும் திறந்து வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் எமது பிரதேச செயலாளர் கலந்து சிறப்பித்து இது போன்ற சமூகப் பணிகளுக்கு தனது பாராட்டுக்களையும் வாழ்த்தக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

துர்க்கை அம்பாளின் அருளால் யாம் கண்ட கனவ நனவாகிறது. எங்கள் இல்லத்தில் சிறு பிள்ளைகளாக வந்த சேர்ந்து கற்று இல்லற வாழ்வில் இணையும் நாம் வளர்த்த அன்புப் பிள்ளைகளுக்கு இனாமாக வீடு கொடுக்க வேண்டும் என்று கடந்த 2010 இல் எடுத்த முயற்சி வீண் போகவில்லை. இதவரை 9 வீடுகள் சீதனமாகக் கொடுத்தோம். தற்போத மெலும் 4 வீடுகள் கட்டம் பணி நிறைவடைந்து அவற்றை திறந்த வைத்துள்ளோம். எமது இல்லப் பிள்ளைகளின் சகல உயர்விற்கும் நாங்கள் எமது உயர்ந்த அர்ப்பணிப்பினை வெளிப்படுத்தி நல்லவற்றை என்றும் செய்வோம் என தெரிவித்தார் செஞ்சொற்செல்வர்.







# ஈழத்தமிழன் நடிகமணி வீ.சீ.வைரமுத்து அவர்களின் 100 வது பிறந்தநாள் கொண்டாட்டம் (11.02.1924)



வி. வைரமுத்து இலங்கையின் மிகச்சிறந்த இசை நாடகக் கலைஞராகக் கருதப்படுபவர். இவர் அரிச்சந்திரனாகத் தோன்றி நடித்த "மயான காண்டம்" எண்ணற்ற தடவைகள் மேடையேற்றப்பட்ட இசை நாடகமாகும். தனது இனிய குரல் வளத்தால் பாடி, உருக்கமாக வசனங்கள் பேசி நடிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறையைச் சேர்ந்த வேலப்பா, ஆச்சிக்குட்டி தம்பதியினருக்கு மகனாக வைரமுத்து பிறந்தார். காங்கேசன்துறை சைவ வித்தியாலயத்தில் தனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்தார். 1932 இல் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் 3 ஆம் வகுப்பில் சேர்ந்தார். பாடசாலைக் காலத்தில் அப்பூதியடிகள் என்ற இசை நாடகத்தில் அப்பூதியடிகளாக நடித்தார். 1938 ஆம் ஆண்டு தனது 14 ஆம் வயதில் சங்கீத கோவலன் என்னும் இசை நாடகத்துக்கு முதன் முதலாக ஆர்மோனியம் வாசித்துள்ளார். இசையில் அதிக ஆர்வம் கொண்ட இவர் 1941 தொடக்கம் 1942 வரை தமிழகம் சென்று மதுரையில் வித்துவான் செல்லப்பா பிள்ளையிடம் கருநாடக இசை பயின்றார். இரண்டு ஆண்டுகளில் சங்கீத வித்துவானாகவும், ஒரு நடிகனாகவும் நாடு திரும்பினார். 1944 இல் அண்ணாவியார் சின்னய்யாவின் மகள் இரத்தினம் என்பவரைத் திருமணம் புரிந்தார்.

இலங்கை திரும்பியவருக்கு இரத்தினபுரியில் ஆசிரியப் பணி கிடைத்தது. நாடகக் கலையில் ஆர்வமுள்ள வைரமுத்து, அடிக்கடி விடுமுறை எடுத்து யாழ்ப்பாணம் வந்து மேடை நாடகங்களில் நடிப்பார். இதனால் இவரின் ஆசிரியர் வேலை பறி போனது. கலைப்பணி மீது கொண்ட பற்றால் "வசந்தகான சபா" என்னும் நாடக மன்றத்தை ஆரம்பித்துச் சரித்திர புராண இதிகாச நாடகங்களை நடித்து மக்கள் மனங்களில் பதியவைத்திருந்தார். மேடை நாடகங்களில் பெண் பாத்திரங்களில் நடிக்கும் வாய்ப்பே வைரமுத்துவுக்கு முதலில் கிடைத்தது. சத்தயவான் சாவித்திரி நாடகத்தில் சாவித்திரியாக நடித்துப் பலரின் கவனத்தையும் ஈர்த்தார். சம்பூரண அரிச்சந்திரா நாடகத்தில் சந்திரமதியாகவும், ஸ்ரீவள்ளி நாடகத்தில் வள்ளியாகவும், நல்லதங்காள் நாடகத்தில் நல்லதங்காளகவும் பெண் பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளார். 1950 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் மேடையேற்றப்பட்ட சம்பூர்ண அரிச்சந்திரா நாடகத்திலேயே வைரமுத்து முதன் முதலாக அரிச்சிந்திரனாக நடித்தார். வைரமுத்துவின் வாழ்க்கைக்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது மயான காண்டம் என்னும் இசை நாடகம். இது இலங்கை முழுவதும் 3000 இற்கும் அதிகமான தடவைகள் மேடையேற்றப்பட்டது.

இலங்கை வானொலியில் பல இசை நாடகங்களை வழங்கினார். மிருதங்கம்,ஆர்மோனியம், வயலின், ஜலதங்கரம் போன்ற இசைக்கருவிகளை இசைப்பதிலும் வல்லவராய் இருந்ததோடு இலங்கை வானொலியில் கர்நாடக இசைக் கச்சேரிகளும் செய்திருக்கின்றார்.இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது பவளவிழாவின் போது இவர் பாடி நடித்த "நந்தனார்" இசை நாடகத்தை ஒலிப்பதிவு செய்து இறுவட்டாக வெளியிட்டார்கள். இலங்கை வானொலியில் முதல் முதலாக வெளிவந்த நாட்டுக்கூத்து நாடகம் இதுவாகும். கலைஞர் ஏ. ரகுநாதன் தயாரித்த நிர்மலா திரைப்படத்தில் இவரது "மயானகாண்டம்" இசை நாடகத்தின் பகுதியும் இணைக்கப்பட்டது.முனைவர் காரை சுந்தரம்பிள்ளை இவர்பற்றிய ஆய்வு நூலாக "நடிகமணி வி.வி. வைரமுத்து வாழ்வும் அரங்கும்" என்ற நூலை எழுதியுள்ளார். கலையரசு சொர்ணலிங்கம் இவருக்கு நடிகமணி என்னும் பட்டத்தை 1960 ஆம் ஆண்டில் வழங்கிக் கௌரவித்தார். 1964 ஆம் ஆண்டு அமைச்சர் எஸ். தொண்டமான் நாடகச் சக்கரவர்த்தி என்னும் பட்டம் வழங்கினார். 1970 ஆம் ஆண்டு தந்தை செல்வா நடிப்பிசை மன்னன் எனும் பட்டத்தை வழங்கினார். பேராசிரியர் கா. சிவத்தம்பி "நாடக தீபம்" என்னும் வி.வி வைரமுத்துவின் நினைவு நூலில் தமிழ் நாடகத்தின் மரணிக்காத குரல் என்று வைரமுத்து அவர்களுக்குப் புகழாரம் சூட்டியிருக்கின்றார். பேராசிரியர் சு. வித்தியானந்தன் கலைக் கோமான் என்னும் விருதையும் பேராசிரியர் க. கைலாசபதி நவரச திலகம் என்னும் விருதையும், தென்னிந்திய தமிழ் மூதறிஞர் ம. பொ. சிவஞானம் நாடக வேந்தன் என்னும் விருதினையும், முன்னாள் வட்டுக்கோட்டைத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் நடிப்பிசைச் சக்கரவர்த்தி என்னும் விருதினையும் பாசையூர் சென்றோக் படிப்பகத்தினர் முத்தமிழ் வித்தகர் என்னும் விருதினையும் வழங்கிக் கௌரவப் படுத்தியிருக்கின்றார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2004 ஆம் ஆண்டில் இவருக்கு "கலாநிதி" பட்டத்தை வழங்கிக் கௌரவித்திருந்தது. வைரமுத்து வானொலி நாடக ஒலிப்பதிவுக்காகக் கொழும்பு சென்ற போது மாரடைப்பால் 1989 யூலை 8 அன்று அன்று காலமானார்.

# சிவபூமியில் மகா சிவராத்திரி சிறப்பு வழிபாடுகள்




உலகமெங்கும் பரந்து வாழும் இந்து மக்களால் எதிர்வரும் 08.03.2024 மகாசிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அந்தவகையில் வழமை போல இந்த முறையும் எமது நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனையில் சிறப்பாக வழிபாடுகள் இடம்பெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதோடு கடந்த வருடம் மட்டக்களப்பு மண்ணில் கொக்கட்டிச் சோலை தான்தோன்றீச்சரர் ஆலய வளாகத்தில் மூலவருக்கான கும்பாபிடேகத்தோடு திறந்து வைக்கப்பட்ட திருமந்திர அரண்மனையிலும் இவ்வருடம் முதல் முறையாக சிவராத்திரி விரத வழிபாடுகள் இடம்பெற உள்ளன.



வடக்கு கிழக்கு மட்டுமன்றி பல இடங்களில் இருந்து வரும் மக்களும் எமது இந்த இரண்டு அரண்மனைகளிலும் உள்ள 108 சிவலிங்கங்களுக்கு தங்கள் திருக்கரங்களால் அபிசேகம் செய்து இரவு முழுவதும் சிவசிந்தனையோடு வழிபாடுகள் மேற்கொள்ள சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# கலாநிதி கலாமணி அவர்களுக்கு அஞ்சலிகள்



வடமராட்சி பிரதேச கல்வி புலமையாளர்களில் ஒருவரான யாழ். பல்கலைக்கழக கல்வித்துறை முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஐயா கலாமணி தனது 72 ஆவது வயதில் 09.02.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அல்வாய் தெற்கைச் சேர்ந்த அன்னார் ஆரம்ப கல்வியை வதிரி தேவரையாளி இந்து கல்லூரியிலும் இடைநிலை கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று யாழ். பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு கலைப்பட்டதாரியானார். யாழ். பல்கலைக்கழகத்தில் பகுதி நேர விரிவுரையாளராக இணைந்து கலைப்பீட விரிவுரையாளரானார். மேலும் உயர் கற்கைகளை மேற்கொண்டு கலாநிதி பட்டத்தை பெற்றுக் கொண்ட அவர் யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வியியல்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றி இருந்தார். கலை இலக்கிய துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் காத்தவராயன் உள்ளிட்ட பல இதிகாச புராண நாடகங்களை தயாரித்தும் நடித்தும் மேடையேற்றியுள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையாரான இவரின் ஒரு மகனான பரணிதரன் கடந்த சில ஆண்டுகளாக ஜீவநதி எனும் இலக்கிய மாத சஞ்சிகையினை வெளியிட்டு வருகிறார். கலாமணி அவர்களது தந்தையர் தம்பிஐயா புகழ் பூத்த அண்ணாவியாராவார்.

# அபுதாபியில் முதல் இந்து கோயில்



மேற்கு ஆசியாவின் மிகப்பெரிய இந்து கோயிலாக கட்டப்பட்டுள்ள பிரமாண்டமான கட்டிடத்தில் 10,000 பேர் வரை தங்கலாம். கடந்த 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்து கோவில் கட்டுவது குறித்த அறிவிப்பை அபுதாபி அரசு வெளியிட்டது. மேலும் கோவில் கட்டுவதற்காக 27 ஏக்கர் நிலத்தையும் அந்த அரசு வழங்கியுள்ளது. கோவில் கட்டுமானத்திற்கான அறிவிப்பை 2015ல் அறிவித்திருந்தாலும் 2018ம் ஆண்டு கோவிலின் கட்டுமான பணி தொடங்கியது. கோவில் கட்டுவதற்கு இளஞ்சிவப்பு கற்கள் ராஜஸ்தானில் இருந்து வரவழைக்கப்பட்டது. இந்த ராஜஸ்தான் கற்களில் என்ன விசேஷம் என்றல் இது சுமார் 50 டிகிரி செல்சியஸ் வெப்பத்தையும் தங்கக்கூடியது. இந்த கோவிலின் உயரும் 108 அடி, நீளம் 262 அடி, அகலம் 180 அடி அளவில் கட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள 7 அமீரகங்களை குறிக்கும் வகையில் 7 கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளது. இவை, நிலநடுக்கம், மற்றும் அதிக வெப்பத்தால் பாதிக்காத வகையில் அதிநவீன தொழில்நுட்பத்தை பயன்பத்தப்பட்டு உள்ளது. சுவாமிநாராயணன், அக்ஷர்-புருஷோத்தம், ராதா-கிருஷ்ணா, ராம-சீதா, லக்ஷ்மணன், அனுமன், சிவன்-பார்வதி, விநாயகர், கார்த்திகேயர், பத்மாவதி-வெங்கடேஸ்வரா, ஜகன்னாதர் மற்றும் அய்யப்பன் உள்ளிட்ட சிலைகள் வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவைச் சேர்ந்த 1500 கைவினை கலைஞர்கள் இந்த கோவிலின் சிலைகளை செதுக்கியுள்ளனர்.





இந்த கோவிலை கட்டுவதற்கு சுமார் 904கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கோவில் அபுதாபியின் அல் ரபா என்ற இடத்தில் இருக்கும் அபு முரேகா என்ற பகுதியில் அமைந்துள்ளது. இந்த கோவில் துபாய்க்கும், அபுதாபிக்கும் இடையே அமைந்துள்ளது. துபாய், அபுதாபி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இந்து மக்கள் அதிகம் இருப்பதால் இந்த கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

# நல்லூர் எசமானி அம்மாவிற்கு அஞ்சலிகள்



நல்லூர் கந்தசாமி கோவிலின் பத்தாவது நிர்வாக அதிகாரி அமரர் குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களது துணைவியாரும் தற்போதைய பதினொராவது நிர்வாக அதிகாரி குமரேஷ் ஷயந்தன குமாரதாஸ மாப்பாண முதலியார் அவர்களது தாயாருமாகிய அமரர் சுகிர்தாதேவி குமாரதாஸ் மாப்பாண முதலியார் (28.01.2024) குகபதமடைந்தார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(மாசி 2024) ISBN-978-955-7420-00-4